DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 99 /2019**

Deposition of Witness: DW1.

| | | | |
|---|---|---|---|
| Name | மலர்விழி | Husband Name – பாலகிருஷ்ணன் | |
| Age | 55 | Village – | தாமரைக்குளம் |
| | | Taluk – | பெரியகுளம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026.

**பிரதிவாதிகள் தரப்பு முதல் விசாரணை.**

நான் தற்போது போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். பிரதிவாதிகள் தரப்பில் முதல் சாட்சியாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் படித்துப் பார்த்து கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்குரை சொத்திற்கான அ – பதிவேடு சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும், வழக்குரை சொத்திற்கான Updating Register சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும், வழக்குரைச் சொத்திற்கான நத்தம் நிலவரித்திட்டம் துாய பதிவேடு சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். (வாதிகள் தரப்பு வழக்கறிஞரால் பி.வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் போடிநாயக்கனூர் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டது என்றும் அதனால் சாட்சி மூலம் இதை குறியீடு செய்யமுடியாது என ஆட்சேபனை தெரிவித்தார். மேற்படி ஆவணங்கள் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. வாதிகள் தரப்பு வழக்கறிஞரால் பி.வா.சா.ஆ.3 ஆவணம் கையால் எழுதப்பட்டுள்ளது என்றும், அரசாணைப்படி அனைத்து பதிவேடுகளும் கணினி மயமாக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் கையால் எழுதப்பட்ட பி.வா.சா.ஆ.3 ஆவணம் அனுமதிக்கத்தக்கதல்ல என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆட்சேபனை குறித்து தீர்ப்புரையில் முடிவு செய்யப்படும்).

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சர்வே எண்.344/14 ற்கான மூல வருவாய் துறை ஆவணங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.344/14 என்பது பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில்

என்னவாக பதிவாகியுள்ளது என்றால் களம் என்று பதிவாகியுள்ளது. சர்வே எண்.344/14 என்பது அரசு புறம்போக்கு என்று பதிவாகியிருந்தால் பதிவுத்துறைக்கு நாங்கள் சர்வே எண்.344/14 என்பது அரசு புறம்போக்கு என்றும், அதன் வழிகாட்டி மதிப்பு பூஜ்ஜியம் என சொல்லி கடிதம் அனுப்பி பதிவுத்துறை பதிவேடுகளில் சர்வே எண்.344/14 ற்கான வழிகாட்டி மதிப்பு பூஜ்ஜியம் என்றுதான் இருக்கும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணமான தமிழக அரசால் எந்த ஆண்டு பின்பற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. UDR என்றால் என்ன என்று தெரியுமா என்றால் எனக்கு அது பற்றி சரியாக ஞாபகம் இல்லை. UDR இந்திய அரசால் நிலம் சம்மந்தமான வகைப்பாடுகள் குறித்து 1979 மற்றும் 1987 ஆண்டுகளில் இரண்டு முறை மாற்றப்பட்டு அ– பதிவேடுகள் அச்சிடப்பட்டு நடைமுறைக்கு வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்தியாவில் எத்தனை வகையான பட்டாக்கள் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்தியாவில் உள்ள பட்டா வகைகளில் நிபந்தனைகள் உள்ள பட்டா வகைகள் எத்தனை நிபந்தனைகள் இல்லாத பட்டாக்கள் எத்தனை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.344/14 என்பது 1979 க்கு முன்பாக ஜமீன் பைமாஸாக இருந்து 1979 க்கு பின்பாக தான் சர்வே எண்.344/14 என மாற்றி அமைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆரம்பத்தில் தாவா சொத்து ஜமீன் பைமாஸாக இருந்து ஜமீன்தாரி ஒழிப்பு சட்டம் 1948 மற்றும் 1963 சட்டத்தின்படி ஜமீன்பைமாஸ் எண்.53/20 முதல் 53/36 வரை உள்ள நிலங்கள் சர்வே எண்.344/14 ஆக மாற்றப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 30.06.1999 ம் தேதி வாதிகள் சுப்பையா என்பவருக்கு சர்வே எண்.344/14 க்கு கட்டுப்பட்ட 92 செண்ட் நிலத்தில் 2185 சதுரடி நிலத்தை வழிகாட்டி மதிப்புடன் வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்தின் மதிப்பு ரூ.74,300 என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.344/14 க்கு கட்டுப்பட்ட 92 செண்ட் நிலமானது மாண்புமிகு பெரியகுளம் சார்பு நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.709/1924 மற்றும் நிறைவேற்றுதல் மனு எண்.63/1929 ல் நீதிமன்ற ஏலமிட்டு அதில் லட்சுமணன் செட்டியார் மற்றும் தெய்வாணை ஆச்சியால் ஏலம் எடுக்கப்பட்ட சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரை சொத்து அரசாங்கத்துக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு நிலம்

என்றால் நீதிமன்றத்தால் ஏலம் விட வாய்ப்பே இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, தற்போது வருவாய்துறை ஆவணங்களில் புறம்போக்கு என்று உள்ளது. ஒரு குடிமகனுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்றால் நிலம் பாத்தியப்பட்டவருக்கு அறிவிப்பு வழங்கி அதற்கு தகுந்த நஷ்டஈடு வழங்கி தான் ஆர்ஜிதம் செய்ய முடியும் என்றால் சரிதான். மேற்படி நடைமுறைகள் எதுவும் தாவா சொத்தை குறித்து அரசால் எடுக்கப்பட்டுள்ளதாக ஆவணங்கள் எதுவும் நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. வழக்குரை சொத்து ஆதியில் வருவாய் துறை ஆவணங்களில் என்னவாக பதிவாகியிருந்தது என்றும், அது எப்போது எதன் அடிப்படையில் அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டது என்பதை குறித்தான விபரங்களை எந்த அதிகாரியிடம் கேட்டால் தெரியும் என்றால் தாசில்தாரை கேட்டால் தான் தெரியும். நான் மூல ஆவணங்களை பார்க்காமல், தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று சரியாக தெரியாமல், தாவா சொத்து எதன் அடிப்படையில் அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டது என்று தெரியாமல் அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.02.02 15:10:51 +0530

District Munsif,
Bodinayakanur.